***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 816/2024 |
| | : | Prosecution P.W - 6 |
| NAME | : | ஜெயராமன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 03.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.10.2019 ம் தேதி கடையம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த இன்டிமேசன் தகவலின் அடிப்படையில் உத்தரவு படி தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு தாக்குதலில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புலவனுரை சேர்ந்த பொன்மலை நகர் ஊரை சார்ந்த தங்கராஜா மகன் முத்து செல்வம் என்பவரிடம் 16.00 மணிக்கு புகார் மனு பெற்று நிலையம் 17.00 மணிக்கு வந்து புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண் 343/2019 இதசபிரிவுகள் 448,294(பி),342,323,324,506(2), வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையையும், வாதியின் புகார் மனுவையும்,இண்டிமேசனையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர்

நீதிமன்றம் அம்பாசமுத்திரம் அவர்களுக்கு அனுப்பியும், மற்றொரு நகலை சம்பந்தபட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகார் தாரரிடம் எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கி கொண்டு நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா.1 என்னிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் புகார் மனு கொடுத்தார். நான் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரம் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 816/2024 |
| | : | Prosecution P.W - 5 |
| NAME | : | பாரதிகண்ணம்மா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 03.07.2025.

முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை மருத்துவ படிப்பு படித்து கொண்டிருக்கிறேன். கடந்த 15.10.2019 ம் தேதி தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது காலை 8.30 மணியளவில் முத்துசெல்வம் என்பவர் 19 வயது ஆண். அவரது தாய் சரஸ்வதியுடன்சிகிச்சைக்காக என்னிடம்அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்த போது தெரிந்த 3 நபர்கள் அவரது வீட்டிற்கு முன்பு வைத்து செங்கலால் காலை 6.30 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. வலதுபுற நெற்றியில் வெட்டு காயம் 3x 1x 0.5 cm அளவில் காணப்பட்டது. அவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் ஆண்கள் பகுதியில் அனுமதித்தேன். அவருக்கு மூளைக்கு சிடிஸ்கேன் எடுத்து பார்த்தேன் அதில் எவ்வித குறைபாடும் இல்லை. அவர்

15.10.2019 ம் தேதி தகவல் தெரிவிக்காமல் மருத்துவமனையிலிருந்து வெளியேறிவிட்டார். அவரை நான் பரிசோதித்து பார்த்தவரை அவருக்கு ஏற்பட்ட காயம் சாதார காயம் என சான்று வழங்கினேன். **மேற்படி காயச்சான்று அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஒரு நபர் கரடுமுரடான பாதையில் கீழே விழுந்தாலும் இதுபோன்ற காயம் ஏற்படும் என்றால் ஏற்படும். காயம் பட்டவருக்கு மேலோட்டமான காயம் தான் இருந்தது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi